நிதிய முகாமையாளரின் அறிக்கை உரித்துவ நிதியம்

அன்பார்ந்த முதலீட்டாளருக்கு,

31 மார்ச் 2026 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான CT ஸ்மித் ஈக்யூட்டி நிதியத்தின் ஆண்டறிக்கையினை முன்னிலைப்படுத்துவதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

31 மார்ச் 2026 இல் (FY26) நிறைவடைந்த ஆண்டின்போது அனைத்து பங்கு விலைச் சுட்டியானது (ASPI) முன்னைய ஆண்டின் அதிகரிப்பான 38.2%[4] உடன் ஒப்பிடும்போது 33.2%[4] ஆல் அதிகரித்தது. அனைத்து பங்கு மொத்த விளைவு சுட்டியானது (ASTRI) 39.2%[4] ஆல் உயர்வடைந்தவேளை திரவத்தன்மையான S&P SL20 சுட்டியானது 31 மார்ச் 2026 இல் நிறைவடைந்த ஆண்டிற்கு 24.7%[4] வளர்ச்சியினை கண்டது. அதேகாலத்தின்போது, CT ஸ்மித் ஈக்யூட்டி நிதியமானது ஒரு அதிகரிப்பாக 42.1% இனை பதிவு செய்து அதன் அளவுகோல் சுட்டியான ASPI இனை விஞ்சிக் காணப்பட்டது.

பொருளாதார மீளாய்வு

இலங்கையின் பொருளாதாரமானது அதன் ஆரோக்கியமான வளர்ச்சி உத்வேகத்தினை 2025 இல் தொடர்ந்ததுடன், இது நிலைபேறான இறைவரி ஒழுக்கம் மற்றும் தாரளமயமான நாணயக் கொள்கையினால் நிலைநிறுத்தப்பட்டது. இதன் விளைவாக, இலங்கையின் பொருளாதாரமானது 2024 இல் காணப்பட்ட +5.0%[2] விரிவாக்கலுடன் ஒப்பிடும்போது 2025 இல் +5.0%[2] வளர்ச்சியினைப் பதிவு செய்தது. மெய்யான மொத்த உள்ளூர் உற்பத்தியிலான (GDP) வளர்ச்சியானது பொருளாதாரத்தின் மூன்று துறைகளிலுமான வருடத்திலிருந்து வருட வளர்ச்சியினால் விரிவாக்கப்பட்டது.

	2023		2024		2025	
	% வளர்ச்சி	GDP இன் % ஆக	% வளர்ச்சி	GDP இன் % ஆக	% வளர்ச்சி	GDP இன் % ஆக
வேளாண்மை	1.6	7.8	0.6	7.5	1.4	8.4
கைத்தொழில்	-9.2	25.3	11.0	26.7	7.8	25.4
சேவைகள்	-0.2	60.7	2.4	59.2	3.3	54.6
GDP	**-2.3**		**5.0**		**5.0**	

மூலம்: புள்ளிவிபரத் திணைக்களம்

சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) உலக பொருளாதார கண்ணோட்டத்தின் பிரகாரம், உலகளாவிய வளர்ச்சியானது 2027 இறுதியில் 3.2%[3] ஆக மேம்படுவதற்கு முன்னர் 2026 இன் இறுதியில் 3.1%[3] ஆக வீழ்ச்சியடையும் என எதிர்வு கூறியுள்ளது. இதற்கு ஈரானிலான அமெரிக்க/இஸ்ரேல் யுத்தம் மற்றும் இதன் காரணமாக உலக வழங்கல் சங்கிலிகள் மற்றும் தலைப்பு பணவீக்கத்திலான தாக்கம் காரணமாயிருந்தது.

<u>வட்டி வீதச் சூழல்</u>

	Nov-24	May-25
ஓரிரவு கொள்கை வீதம் (%)	8.00	7.75
நியதிச்சட்ட ஒதுக்க விகிதம் (%)	2.00	2.00

மூலம்: இ.ம.வ.

இலங்கை மத்திய வங்கியானது FY26 முழுவதும் அதன் தாராளமயமான நாணயக் கொள்கை நிலைப்பாட்டினை பராமரித்ததுடன், மே 2025 இல் ஒரேயொரு 25 அடிப்படை புள்ளிகள் குறைப்பானது காணப்பட்டது. அதேவேளை, விரைவாக்கப்பட்ட அந்நிய செலாவணி ஒதுக்கக் கட்டியெழுப்புதல் முயற்சிகள் வங்கியியல் துறையின் திரவத்தன்மையினை ஆரோக்கியமான மட்டங்களில் வைத்திருந்தது. மேலும், ஒற்றை எண் கடன் வழங்கல் வீதங்கள், வலுவான கேள்வி நிலைமைகள் மற்றும் பெப்ரவரி 2025 இல் வாகன இறக்குமதி தடையின் நீக்கம் என்பன FY26 முழுவதும் தனியார் துறை கடன் வளர்ச்சி உத்வேகத்தினை வழிநடத்தி மார்ச் 2026 இல் வருடத்திலிருந்து வருட வளர்ச்சியாக +27.%[1] இனை பதிவுசெய்தது.



மூலம்: இ.ம.வ.

	Oct-25	Nov-25	Dec-25	Jan-26	Feb-26	Mar-26
தனியார்துறை கடன் வளர்ச்சி (%)	24.1	26.0	25.2	26.0	28.0	27.0

மூலம்: இ.ம.வ.

<u>வெளிவாரி வர்த்தகம்</u>

வணிகச்சரக்கு வர்த்தகப் பற்றாக்குறையானது 2025 இல் தொடர்ச்சியாக விரிவடைந்து USD 8 பில்லியனாக[1] காணப்பட்டது. இது இறக்குமதிகளிலான வளர்ச்சியானது ஏற்றுமதிகளிலான வாள்சியினை விஞ்சியமையினாலாகும். கைத்தொழில் ஏற்றுமதிகள் 2025 இல் +5.2%[1] ஆல் வளர்ச்சியடைந்தது. இது குறிப்பாக உணவு, பானங்கள் மற்றும் புகையிலை ஏற்றுமதிகளிலான +37.4%[1] வளர்ச்சியினால் வழிநடத்தப்பட்டது. இலங்கையின் பாரிய ஏற்றுமதி துறைகளான ஆடை மற்றும் புடவைகள் ஒரு மிதமான +5.0%[1] வளர்ச்சியினை பதிவு செய்தது. நுகர்வுப் பொருட்களது இறக்குமதியானது, வாகன இறக்குமதிகளிலான தடைகளின் நீக்கத்தினைத் தொடர்ந்து தனிப்பட்ட வாகன இறக்குமதிகள் 24 மடங்காக அதிகரித்தன் விளைவாக, வருடத்திலிருந்து வருடம் +59.2%[1] ஆல் உயர்வடைந்தது. அதேநேரம், இடையீட்டு பொருட்களது இறக்குமதிகள், எரிபொருள் இறக்குமதிகளிலான -7.2%[1] வீழ்ச்சியினால் துணையளிக்கப்பட்டு ஓரளவு வீழ்ச்சியடைந்தது. தனிப்பட்ட வாகனம் மற்றும் எரிபொருள் நீங்கலாக, இலங்கையின் மொத்த இறக்குமதியானது 2025 இல் வருடத்திலிருந்து வருடம் +9.8%[1] ஆல் உயர்வடைந்தது. முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதியானது ஒரு ஆரோக்கியமான வளர்ச்சியாக வருடத்திலிருந்து வருடம் +18.6%[1] ஆக காணப்பட்டு, பொருளாதாரத்தில் மேம்பட்ட மூலதனச் செலவினத்திற்கான ஆர்வத்தினை குறிகாட்டியது. வணிகச் சரக்கு வர்த்தகப் பற்றாக்குறையானது விரிவடைந்து காணப்பட்டாலும், பொருளாதாரமானது 2025 இற்கு ஒரு நடைமுறைக் கணக்கு மிகையினை பதிவு செய்தது. இதற்கு பெருமளவில் வெளிநாடுகளில் தொழில்புரியும் இலங்கையர்களிடமிருந்தான பங்களிப்பில் ஒரு வலுவான அதிகரிப்பினால் (+22.8%[1] வருடத்திலிருந்து வருடம்) துணையளிக்கப்பட்டது.

(USD மில்.)	2024	2025	வ.வ. வளர்ச்சி (%)	Oct-25	Nov – 25	Dec-25
ஏற்றுமதிகள்	12,772	13,581	*6.3%*	1,150	1,058	1,158
இறக்குமதிகள்	18,841	21,480	*14.0%*	2,157	1,778	2,155
வர்த்தக மீதி	**-6,069**	**-7,899**		**-1,007**	**-720**	**-997**
தொழிலாளர் பணமனுப்பல்கள்	6,575	8,076	*22.8%*	712	673	879
சுற்றுலாத்துறை	3,169	3,219	*1.6%*	186	252	309

நடைமுறை கணக்கு மீதி	1,316	1,719	*30.6%*	-219	67	18

மூலம்: இ.ம.வ.

<u>பரிமாற்றல் வீதச் சூழல்</u>

அமெரிக்க டொலருக்கு எதிராக தொடர்ச்சியாக இரண்டு வருடங்களாகக் காணப்பட்ட இரட்டை எண் பெறுமதி ஏற்றத்தினைத் தொடர்ந்து இலங்கை ரூபாயானது 31 டிசம்பர் 2025 இல் உள்ளவாறு -5.6%[1] ஆல் வீழ்ச்சியடைந்து ரூ. 309.99 ஆக காணப்பட்டது. இலங்கை 2025 இல் அதன் வெளிவாரி நடைமுறைக் கணக்கு மிகையினை அதிகரித்தபோதிலும், இலங்கை ரூபாயின் பலவீனத்திற்கு, ச.நா.நி. திட்டம் மற்றும் உயர்வடைந்த வெளிநாட்டு நாணய கடன் மீள்செலுத்தல்களின் கீழான தேறிய சர்வதேச ஒதுக்க இலக்குகளை சந்திப்பதற்காக இ.ம.வ. இனால் மேற்கொள்ளப்பட்ட நிலைபேறான டொலர் கொள்வனவுகள் காரணியாயிருந்தன. இலங்கையின் மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்கங்கள் மே 2026 இன் இறுதியில் ஒரு மதிப்பிடப்பட்ட USD 6.9 பில்லியனாக[1] மேம்பட்டது. (இது பயன்பாட்டில் நிபந்தனையினைக் கொண்ட PBoC இடைமாற்றல் உள்ளடங்கலாகும்).



மூலம்: இ.ம.வ.

<u>பணவீக்கம்</u>

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டியின் (CCPI, 2021=100) வருடத்திலிருந்து வருட மாற்றத்தின் மூலம் அளவிடப்படும் தலைப்பு பணவீக்கமானது, சற்று சாத்தியமாக திரும்புவதற்கு முன்னர், ஜூலை 2025 வரை அதன் பணச்சுருக்கப் பாதையினை தொடர்ந்தது. பணவீக்கமானது டிசம்பர் 2025 இன் இறுதியில் இலங்கை மத்திய வங்கியின் மத்திய கால இலக்கு எல்லையான 3 – 7% இன் குறைவெல்லையிலும் பார்க்க குறைந்து காணப்பட்டது. கேள்வி நிலைமைகளில் ஒரு குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காணப்பட்டபோதிலும்,

குறைவான எரிபொருள் விலைகளும் திடமான உலகளாவிய பண்டங்களது விலைகளும் பணவீக்க அழுத்தங்களை தணித்தன. எவ்வாறாயினும், ஈரானில் ஆரம்பமான யுத்தத்தினை தொடர்ந்து உலகளாவிய வலு விலைகளிலான செங்குத்தான அதிகரிப்புகள் மற்றும் அதன் இரண்டாம் கட்டளை தாக்கங்கள் என்பன ஏப்ரல் 2026 இல் தலைப்பு பணவீக்கத்தினை இ.ம.வ. இன் மத்திய கால இலக்கான 5.0% இற்கு மேலாக தள்ளியது (+5.5%[2] in May 2026; CCPI, 2021=100).



மூலம்: இ.ம.வ.

<u>அரசிறை வருமானக் கணக்குகள்</u>

அரசிறை வருமானமானது ரூ. 5.5 டிரில்லியனை[5] அடைந்து (மொ.உ.உ. இன் 16.7%) வருடத்திலிருந்து வருடம் ஒரு குறிப்பிடத்தக்க வளர்ச்சியாக +34.1%[5] இனை பதிவுசெய்தது. இதற்கு மோட்டார் வாகன இறக்குமதிகளின் மீள் ஆரம்பம் மற்றும் மேம்பட்ட பொருளாதார நடவடிக்கைகளின் பின்னணியிலான பொருட்கள் மற்றும் சேவைகளிலான உயர்ந்த வரிகளிலிருந்து உருவாக்கப்பட்ட வருவாய் காரணியாய் இருந்தன. உயர்வான கூட்டாண்மை இலாபகரத்தன்மை மற்றும் சிறந்த வரி வருவாய் சேகரிப்பு / நிர்வாகத்தினால் துணையளிக்கப்பட்டு வருமானத்திலான வரிகள் வருடத்திலிருந்து வருடம் +11.0% ஆக மேம்பட்டது. இதன் விளைவாக, இலங்கை அரசாங்கமானது 2025 இற்கான ச.நா.நி. இன் அளவுசார் இலக்குகளான வரி வருவாய் சேகரிப்பு மற்றும் பிரதான மிகை என்பவற்றை இலகுவாக சந்தித்தது. தொடர்ச்சியான செலவினமானது மொ.உ.உ. இன் சதவீதமாக 16.0%[5] இற்கு வீழ்ச்சியடைந்தது. இது வட்டிக் கொடுப்பனவுகளிலான வீழ்ச்சி மற்றும் பொருட்கள் மற்றும் சேவைகளில் குறைவான செலவழிப்பிற்கு மத்தியிலாகும். எவ்வாறாயினும், இலங்கை அரசாங்கமானது அதன் பொது முதலீட்டு பாதீட்டினை தொடர்ந்தும் குறைவாக பயன்படுத்தி மூலதனச் செலவினம் மொ.உ.உ. இன் 3.1% இற்கு மாத்திரமே கணக்கீடு செய்தது. மேலும், இலங்கை அரசாங்கமானது டிட்வா தொடர்பான மீள்கட்டமைப்பு மற்றும் நிவாரண முயற்சிகளுக்காக ஒரு துணை பாதீட்டு மீள் ஒதுக்கமாக ரூ. 500 பில்லியனை அறிவித்தது. இதன் விளைவாக, 2026 இன் இறுதியில் முன்னர் மதிப்பிடப்பட்ட பிரதான மிகையான 2.5% இலிருந்து மொ.உ.உ.

இன் 1.0% ஆக கீழ்நோக்கி திருத்தப்பட்டது. ச.நா.நி. இன் நீடிக்கப்பட்ட நிதியளித்தல் வசதித் திட்டத்தின் ஐந்தாம் மற்றும் ஆறாம் கூட்டு மீளாய்வின் பிரகாரம், மொ.உ.உ. உடனான அரசாங்கத்தின் வருவாயானது 2026 மற்றும் 2027 இன் இறுதியில் முறையே 15.2%[3] மற்றும் 15.1%[3] ஆக வழமைக்கு மாறும் என எதிர்வுகூற்றப்பட்டுள்ளது. இது 2025 இல் காணப்பட்ட அதியுயர்வான வாகன இறக்குமதிகள் வழமைக்கு திரும்பும் என எதிர்வுகூறப்பட்டுள்ளதனால் ஆகும்.

உறுப்படி	2023 ரூ.பில்.	2024 ரூ.பில்.	2025 (தற்காலிக) ரூ.பில்.	2026 (மதிப்பீடு) ரூ.பில்.
மொத்த வருவாய்	3,074	4,091	5,486	5,300
GDP இன் % ஆக	***11.1***	***13.6***	***16.7***	***15.4***
மொத்த செலவினம்	5,357	6,131	6,230	7,557
பிரதான மிகை / (பற்றாக்குறை)	**173**	**650**	**1,756**	**360**
GDP இன் % ஆக	***0.6***	***2.2***	***5.4***	***1.0***

மூலம்: நிதி அமைச்சு, பாதீடு 2026 மற்றும் துணைப் பாதீடு 2026

சந்தை மீளாய்வு

பன்முகமான வெளிவாரி அதிர்ச்சி நிகழ்வுகள் இருந்தபோதிலும், கொழும்பு பங்குப் பரிவர்த்தனையானது முன்னயை நிதியாண்டிலிருந்தான அதன் உயர்நோக்கிய உத்வேகத்தினை நிலைபேறாக்கியது. முடக்கப்பட்ட வட்டி வீதங்கள், நிலைத்தன்மையான பாரியபொருளாதார நிலைமைகள் மற்றும் ஆரோக்கியமான கூட்டாண்மை இலாப வளர்ச்சி என்பன முதலீட்டாளர் உணர்வுகளை அப்படியே வைத்திருந்தது. நிதியாண்டானது அமெரிக்க நிர்வாகத்தினால் சடுதியாக அறிவிக்கப்பட்ட ஆழமான பரஸ்பர சுங்கவரியுடன் ஆரம்பித்து ஈரானிய அணு வசதிகளிலான அமெரிக்க இராணுவ தாக்குதல்களினால் மேலும் பாதிக்கப்பட்டது. தலைப்புச் செய்திகளுக்கு சந்தையானது எதிர்மறையாக எதிர்செயலாற்றியபோதிலும், அதன் பின்னரான குறைக்கப்பட்ட பரஸ்பர சுங்கவரி வீதங்களது அறிவித்தல் மற்றும் ஈரானில் அமெரிக்க இராணுவத்தின் ஈடுபாட்டின் சுருக்கமான தன்மை என்பன சொத்துக்களின் விலைகளில் ஒரு வலுவான மீட்சிக்கு வழிசமைத்தது. மேம்பட்ட சந்தை உணர்வுகள் மற்றும் மே 2025 இல் இ.ம.வ. இனால் மேற்கொள்ளப்பட்ட கொள்கை வட்டி வீதத்திலான குறைப்புடன் இணைந்த மிகையான திரவத்தன்மை என்பன கொழும்பு பங்குச் சந்தையில் மே முதல் நவம்பர் 2025 வரையான காலத்தில் ஆறு மாதங்கள் தொடர்ச்சியான முன்னேற்றம் காணப்பட்டது. 2025 இன் இறுதிப் பாகத்தில் டிட்வா புயலானது சந்தை உத்வேகத்தினை நிறுத்தியபோதிலும், சந்தையானது 2026 இன் ஆரம்பத்தில் வலுவடைந்தது. இது முதலீட்டாளர்கள் வங்கியியல் துறை பங்குகளில் (வருடாந்த பங்கிலாபங்களை எதிர்பார்த்து) மற்றும் கட்டுமானம் தொடர்பான கம்பனிகளில் (எதிர்பார்க்கப்பட்ட இலங்கை அரசாங்கத்தின் மீள்கட்டமைப்பு செலவழித்தல்) அவர்களது முதலீடுகளை மேற்கொண்தனால் ஆகும். எவ்வாறாயினும், பெப்ரவரி மாதத்தின் இறுதியில் மீண்டும் ஒருமுறை முதலீட்டாளர்

உணர்வானது கடுமையாக பாதிக்கப்பட்டது. இது அமெரிக்காவும் இஸ்ரேலும் ஈரானில் கூட்டு இராணுவ தாக்குதல்களை ஆரம்பித்ததன் காரணத்தினாலாகும். உயர்வடைய தளம்பல் இருந்தபோதிலும், அ.ப.வி.சு. ஆனது மற்றுமோர் வலுவான இலாப (+33.2%[4]) வருடத்தை அடைந்தவேளை மிகவும் திரவத்தன்மையான S&P SL20 சுட்டியானது வருடத்திலிருந்து வருடம; +24.7%[4] பெறுமதி ஏற்றத்தினைக் கண்டது. மேலும், ஊசலாடுகின்ற முதலீட்டாளர் உணர்வுகள் மற்றும் குறிப்பிடத்தக்க வெளிநாட்ட விற்பனை காணப்பட்டபோதிலும், சந்தையின் நாளாந்த சராசரி புரள்வானது வருடத்திலிருந்து வருடம் +131.2% ஆல் அதிகரித்து ரூ. 5,179 மில்லியனை[4] எட்டியது. அதேவேளை 31 டிசம்பர் 2025 இல் உள்ளவாறான சுட்டியின் சந்தை மூலதனமாக்கமானது ரூ. 8,069 பில்லியனாக[4] உயர்வடைந்தது (பெயரளவு மொ.உ.உ. இன் 24.6%). மேலாக, இவ்வாண்டின்போது புதிதாக 57,458 மத்திய வைப்புத் திட்டக் (ம.வை.தி.) கணக்குகள் (வருடத்திலிருந்த வருடம் 3 மடங்கு அதிகரிப்பு) திறக்கப்பட்டு 1 மில்லியன் ம.வை.தி. கணக்குகளை மைல்கல்லினை தாண்டியது (31 டிசம்பர் 2025 இல் 1,066,499 ம.வை.தி. கணக்குகள

சந்தை குறிப்பான்கள்	31-Mar-23	31-Mar-24	31-Mar-25	31-Mar-26
ASPI (% YoY)	4.5	23.0	38.2	33.2
ASTRI (% YoY)	4.5	26.9	46.4	39.2
S&P SL20 (% YoY)	-11.5	23.7	42.7	24.7
சந்தை மூலதனவாக்கம் (ரூ.பில்.)*	3,903.5	4,535.0	5,696.0	8,068.6
சராசரி நாளாந்த புரள்வு (ரூ. மில்.)**	2,143.5	1,579.9	2,240.0	5,179.0
சந்தை வி.உ.வி. (X)	5.0	9.9	8.3	10.6
தேறிய வெளிநாட்டு பாய்ச்சல் (ரூ.பில்.)	33.0	-4.1	-12.7	-47.7

*31 டிசம்பர் 2025 இல் உள்ளவாறானது. ** 1 டிசம்பர் 2025 இல் நிறைவடைந்த வருடத்திற்கானது

மூலம்: கொ.ப.ப. தரவு

Source: CSE Data



Source: CSE Data

CT ஸ்மித் உரித்துவச் செயற்திறன்

CT ஸ்மித் உரித்துவ நிதியமானது மீளாய்வு செய்யப்படும் நிதியாண்டின்போது +42.1% அதிகரிப்பினை பதிவு செய்தது, இது அ.ப.வி.சு. இன் செயற்திறனான +33.2% இனை விஞ்சிக் காணப்பட்டது. இதன் விளைவாக, நிதியமானது கடந்த ஐந்து ஆண்டுகளின் மீது ஒரு தொடர் வருடாந்த வளர்ச்சி வீதமாக (CAGR) +29.1% இனை பதிவுசெய்துள்ளது (எதிர் அ.ப.வி.சு.இன் 24.2%). FY26 இன்போது நிதியமான உரித்துவங்கள் நோக்கி உயர்ந்த மூலோபாயச் சாய்வினை தொடர்ந்தும் பராமரித்தவேளை, விலை அசைவுகள் மற்றும் சந்தை அபிவிருத்திகளின் அடிப்படையில் சொத்து ஒதுக்கத்தில் வழமையான தந்திரோபாயத் தீர்மானங்களை மேற்கொண்டது. இது சந்தை பலமடைந்துள்ளபோது பகுதியளவில் இலாபங்களை எய்தப்பெற்றும் சந்தை பலவீனங்களின்போது பங்குகளிலான நிலைகளை திரட்டியும் மேற்கொள்ளப்பட்டது. நிதியமானது மூலதனப் பொருட்கள், வங்கிகள், பண்டங்கள் மற்றும் போக்குவரத்து துறைகளில் மிகை நிறையிடப்பட்ட நிலைகளை பராமரித்தது. இது பொருளாதார நடவடிக்கைகளின் மீட்பு, தனியார் துறை கடன் வளர்ச்சியிலான வலுவான உத்வேகம் மற்றும் நுகர்வோர் மற்றும் கட்டுமானக் கேள்வியிலான நிலைபேறான முன்னேற்றம் என்பவற்றிலிருந்து நலனடைந்தது. நிதியத்தின் "ஐந்த பகுதிகள் அடித்தளமான" முதலீட்டு மூலோபாயமானது பங்குத் தெரிவில் ஐந்து பண்பு சார்ந்த காரணிகளில் முன்னிறுத்தம் செய்வதுடன், கடந்த மூன்று ஆண்டுகளாக ஒரு தடத்தொடரல் வழுவாக 5.7% இனை பராமரித்தது. இது சந்தை விளைவுகளில் காணப்பட்ட மிகையான தளம்பல்களிலிருந்து அலகுடைமையாளர்களை பாதுகாக்கின்றது.

முதல் 5 துறைகள்	நிறை (%)
மூலதனப் பொருட்கள்	28.3%
வங்கிகள்	25.3%
பண்டங்கள்	10.3%
போக்குவரத்து	10.1%
தொலைதொடர்பு சேவைகள்	5.0%

முதல் 5 பங்கு நிலைகள்	நிறை (%)
நேஷன்ஸ் ட்ரஸ்ட் பேங்க் - வாக்களிக்கும்	10.1%
டிஜிட்டல் மொபிலிட்டி சொலூாசன்ஸ்	9.4%
எக்சஸ் இன்ஜினியரிங்	8.1%
ஹேமாஸ் ஹோல்டிங்ஸ்	5.5%
ஹட்டன் நெஷனல் பேங்க்	5.0%





மூலம்: கொ.ப.ப. தரவு, CEF செய்கைப் பத்திரங்கள் / மாதாந்த செய்திக் கடிதங்கள்

எதிர்பார்ப்புக்கள், கண்ணோட்டம் மற்றும் மூலோபாயம்

ஜூன் 2023 இல் ஆரம்பித்த நாணயக் கொள்கை தளர்த்தல் சுற்றிலிருந்து இலங்கையின் மூலதனச் சந்தைகள், கட்டுப்படுத்தப்பட்ட பணவீக்கம், இறைவரி பிரதான மீதியின் மிகை மற்றும் வெளிவாரி நடைமுறைக் கணக்கு மிகை என்பவற்றினூடாக நிரூபிக்கப்பட்ட நாணய, இறைவரி மற்றும் வெளிவாரித் துறையிலான ஒப்பீட்டளவு நிலைத்தன்மையிலிருந்து நலனடைந்தன. இந்த சாதகமான பாரியபொருளாதாரப் பின்னணியானது உள்ளூர் வட்டி வீதங்களை நிலையாக வைத்திருந்ததுடன் இது இடருடைய சொத்துக்களுக்கு ஒரு சாதகமான முதலீட்டுக் காலநிலையினை உருவாக்கியது. முன்னர் குறிப்பிட்டது போல் FY26 ஆனது பலரதப்பட்ட வெளிவாரி அதிர்ச்சி நிகழ்வுகளை முன்னிலைப்படுத்தியபோதிலும்,

உள்ளூர் பொருளாதாரமானது கடந்த மூன்று ஆண்டுகளாக கட்டியெழுப்பப்பட்ட இறைவரி மற்றும் வெளிவாரி இடையகங்களினால் துணையளிக்கப்பட்டு மீளெழுச்சியாக இருந்தது. எவ்வாறாயினும், ஈரான் மீதான அமெரிக்க /இஸ்ரேலின் நீடித்த யுத்தம் மற்றும் அதன் விளைவாக முக்கிய நீர் வழியான ஹோர்முஸ் ஜலசந்தியின் மூடலானது இலங்கையின் வெளிவாரித் துறை மற்றும் உள்ளூர் விலைகளில் கணிசமான அழுத்தத்தை ஏற்படுத்தியதுடன், இதன் காரணமாக இ.ம.வ. தளர்வான நாணயக் கொள்கை சுற்றினை நிறைவு செய்து நாணயக் கொள்கையினை இறுக்கமாக்குவதற்கு தூண்டியது. இ.ம.வ. ஆனது உயர்வடைந்த நாணயத் தளம்பலை மென்மையாக்குவதற்கு உள்ளூரின் வெளிநாட்டு நாணயச் சந்தையில் தலையிட்டு வங்கியியல் முறைமையில் காணப்படும் மேலதிக திரவத்தன்மையினை உள்ளீர்ப்பதற்கு திறந்த சந்தை செயற்பாடுகளை பொறுப்பேற்றது. இந்த பின்னணிக்கு மத்தியில், அ.ப.வி.சு. இதே காலத்தின்போது +5.9% வளர்ச்சியினை அடைந்தபோதிலும், கொழும்பு பங்குச் சந்தையானது FY27 இன் முதல் இரண்டு மாதங்களின்போது நாளாந்த புரள்வில் ஒரு குறிப்பிடத்தக்க வீழ்ச்சியினை கண்டது. எவ்வாறாயினும், ஈரானிலான முரண்பாடு தவிர்ப்பு முன்னெடுப்புகள் (போரிடும் தரப்பினர்களிடையே கைச்சாத்திடப்பட்ட ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தினால் உறுதிசெய்யப்பட்டது) மற்றும் ஹோர்முஸ் ஜலசந்தியினூடான எண்ணெய்க் கப்பல்களின் போக்குவரத்தில் காணப்பட்ட தொடர்ச்சியான முன்னேற்றமானது வலு மற்றும் பாதிப்படைந்த ஏனைய பண்டங்களின் விலைகளில் கீழ்நோக்கிய அழுத்தத்தினை பிரயோகித்தது. இதன் விளைவாக, நிலைபேறான உயர் பணவீக்கம், செங்குத்தான ரூபாயின் பலவீனம் மற்றும் கடும்போக்கான மத்திய வங்கியின் கொள்கை தலையீடுகள் போன்ற தீவிரமான எதிர்மறை இடர்கள் குறிப்பிடத்தக்களவு குறைவடைந்துள்ளதுடன், இது 2026 இன் எஞ்சிய காலத்தின்போது இடர்சார்ந்த சொத்துக்களுக்கு நல்வாய்ப்பாக உள்ளது. கொள்கை வட்டிவீதங்கள் 100 அடிப்படை புள்ளிகளால் அதிகரிக்கப்பட்டபோதிலும், வரி செம்மையாக்கப்பட்ட மெய் வட்டி வீதங்கள் முடக்கப்பட்டு காணப்படுவதுடன், இது இலங்கையின் உரித்துவங்களிலான கணிசமான வெளிப்பாய்ச்சலை வரையறை செய்கின்றது. அத்துடன் உரித்துவங்களிலிருந்து உழைக்கப்படும் பங்கிலாபங்கள் மாத்திரம் வருமான வரிக்கு உட்படுவதனால், அவை வரி செயற்திறனான முதலீடுகளாகக் காணப்படுகின்றன. பெறுமதியிடல் கண்ணோட்டத்தில் சுட்டியானது தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகளாக வலுவான வளர்ச்சியினை அடைந்தபோதிலும், இந்த வளர்ச்சியானது பெருமளவில் 2025 இல் காணப்பட்ட ஆரோக்கியமான கூட்டாண்மை இலாபங்களினால் துணையளிக்கப்பட்டது (2024 இல் ஒரு தடவையான இலாபத்திற்கு செம்மையாக்கப்பட்டுள்ளது, வ.வ. +42%). இதன் விளைவாக, சந்தை வர்த்தகங்கள் அதன் வரலாற்று சராசரிக்கு சீரமைவாக காணப்படுவதுடன், 2026 இன் இறுதியில் கூட்டாண்மை இலாபங்களில் நாம் ஆரோக்கியமான வளர்ச்சியினை எதிர்வுகூறும்போது மேலும் உயர்நோக்கிய மீள் மதிப்பீட்டிற்கான வாய்ப்பினைக் உரித்துவம் கொண்டுள்ளது.

நெருங்கிய காலத்தின் மீது நாம் உரித்துவங்களில் தொடர்ந்தும் மிகைநிறையாக இருப்பதுடன், இது குறிப்பாக எமது முதலீட்டுத் தேக்கத்திலுள்ள கம்பனிகளில், உயர் பெறுமதியிடல் வாய்ப்புக்கள் மற்றும் இலாப வளர்ச்சியிலான மேம்பட்ட கண்ணோட்டம் என்பவற்றிலிருந்து எழுகின்ற விலை உயர்வினை கைப்பற்றுவதற்காகும். சுட்டியின் பெறுமதியிடலானது அதன் வரலாற்று சராசரியினை நெருங்குவதனால் நிதியமானது உரித்தவ முதலீட்டுத் தேக்க உரித்துடைமைகளின் எண்ணிக்கையினை குறைப்பதற்கு இலக்குவைத்துள்ளதுடன், மூலதனப் பொருட்கள், வங்கியியல், போக்குவரத்து, மற்றும் பண்டங்கள் துறைகளில் அதன் உயர்ந்த, ஆழ்ந்த நம்பிக்கை தெரிவுகளில் செயலூக்கமான உயர் நிறையிடல்களை கடைப்பிடிக்கும். மத்திய காலத்தின் மீது வங்கியியல் துறையில் எதிர்வுகூறப்பட்டுள்ள நடு பதின்ம

உரித்துவத்திலான விளைவு இருந்தபோதிலும் இத்துறையில் பெறுமதியிடல் கழிவானது தொடர்வதுடன், மற்றும் நுகர்விலான நிலைபேறான கேள்வியினால் வழிநடத்தப்படும் பருமன் மீட்டல் மற்றும் இரண்டாம் அரைப் பகுதியில் கட்டுமான நடவடிக்கைகளிலான ஒரு முன்னேற்றம் என்பன மத்திய காலத்தின் மீது நிதியத்திற்கு ஒரு செயலூக்கமான விளைவினை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நிதியத்தின் முதலீட்டு மூலோபாயமானது, நிலைபேறுடைய இலாப வளர்ச்சி, வலுவான தடையற்ற காசுப் பாய்ச்சல் உருவாக்கம், உரித்துவம் மற்றும் இலாபகரத்தன்மை விடுமிகைகளில் உயர்ந்த மத்திய-சுற்று விளைவு, விரைவான மற்றும் ஆற்றலான முகாமைத்துவ அணிகள், மற்றும் நியாயமான பெறுமதியிடல்கள் போன்ற அடிப்படை பண்புகளினால் துணையளிக்கப்பட்ட ஒரு பன்முகப்படுத்தப்பட்ட முதலீட்டுத் தேக்க கம்பனிகளை வைத்திருப்பதாகும். இது மத்திய காலத்தின் மீது அதன் அலகுடைமையாளர்களுக்கு சராசரி இடர் செம்மையாக்கப்பட்ட விளைவுகளுக்கும் மேலான விளைவினை உருவாக்குதல் நோக்கி அமைந்துள்ளது.

மூலங்கள்

[1] இலங்கை மத்திய வங்கி (www.cbsl.gov.lk)

[2] சனத்தொகை மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் (www.census.gov.lk)

[3] சர்வதேச நாணய நிதியம் (www.imf.org)

[4] கொழும்பு பங்குப் பரிவர்த்தனை (www.cse.lk)

[5] நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு (www.treasury.gov.lk)